அரிசி, பால்மா தட்டுப்பாட்டை நீக்குமாறு அரச அதிபர் கொழும்புக்கு அறிவிப்பு

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 22 இதழ் 359
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 04 — 02 — 1993

(யாழ்ப்பாணம்) பி. கா. மாணிக்கவாசகர் டுப்பாடு ஏற்பட்டுவிவதாக
யாழ் மாவட்டத்தில் தற் அதிபர்வசிய சேவைகள் வும் இதனால் பெருமளவு மக்
போது ஏற்பட்டுள்ள அரிசித நாயகத்தை கேட்டுவிளார். கள் பாதிக்கப்பட்டுவிதாக
தட்டுப்பாட்டை நீக்குவதற் போக்குவரத்துப் பாதிப் வும் தெரிவித்து அவசரச்
குத் தமந்த நடவடிக்கை பாடி யாழ் குடாநாட்டில் செய்திபொன்றை நேற்றுக்
எடுக்குமாறு யாழ். அரச அதி அரிசிக்குப் பெருமளவு தட் (4ம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கு அகதிகளுக்குஜெர்மன் அரசு 26 கோடி ரூபா உதவி

(லண்டன்) இந்த உதவித் தொகை அக
வடக்கு-கிழக்கில் தொட திகளுக்கான ஐ. நா. உயர்
ரும் யுத்தத்தினால் அகதி ஸ்தானிராலயத்தில் அரச
களாகி இடம் பெயர்ந் சார்பற்ற இணைங்களுக்கு
தோருக்கு ஜேர்மன் அரசு 25 வழங்கப்படும்.
கோடி 50 லட்ச ரூபாவை அகதிகளின் கல்வி, சுகா
வழங்கியுள்ளது. (4-ம் பக்கம் பார்க்க)

படையினர் பலி அரசு ஊர்ஜிதம்

(கொழும்பு)
மாதகல் பகுதியில் அரச
படையினருக்கும் விடுதலைப்
புலிகளுக்குமிடையில் நேற்று
முன்தினம் இடம் பெற்ற
மோதலில் 10 படையினர்
பலியானதாக இராணுவ உய
ரதிகாரிகள் நேற்று ஊர்ஜிதம்
செய்தனர். (இ-க)

★ மேற்குலக ராஜதந்திரிகள் குடாநாட்டுக்கான போக்குவரத்தை சீர்செய்யுமாறு அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)
வடபகுதிக்கான போக்கு வரத்து முற்றுகத் தடைப்பட்டிருப்பது குறித்து மேற்குலக ராஜதந்திரிகள் தமது கவலையையும் அதிருப்தியையும் ஸ்ரீலங்கா அரசுக்கு தெரிவித்துள்ளனர். விடுதலைப்புலிகளுடன் ஒரு இணக்கத்துக்கு வந்து குடா நாட்டுக்கான போக்கு வரத்துப் பாதையைத் திறந்து விடு மாறும் அவர்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக வும் தெரிய வருகிறது.

கிளாலி பாதை முற்றுகத் டங்களும், உணவுத்தட்டுப் வரப்பட்டுள்ளதாகவும் அறிய
டைப்பட்டதால் யாழ்.குடா பாடு ஏற்படுவதால் உண்டா வந்துள்ளது.
நாட்டு மக்கள் அனுபவித்து கும் பாதக விளைவுகளும் அர இதேவேளை மேற்கு நாடு
வரும் போக்குவரத்துச் சங்கின் கவனத்துக்கும் கொண்டு களைச் சேர்ந்த தூதுக்குழு
ஒன்று வடபகுதிக்கு விஜயம்
(4-ம் பக்கம் பார்க்க)

படை அதிகாரிகள் வவுனியா விஜயம்

(கொழும்பு)
வவுனியாவிற்கு மேற்கே
இராணுவ நடவடிக்கை இடம்
பெற்ற பகுதிகளுக்கு நேற்று
முன்தினம் காலை படைத்தள
பதிகள் விஜயம் செய்தனர்.
இந்தப் பகுதிகளுக்கு பாது
காப்பு அமைச்சின் செயலர்
ஜெனரல் சிறில் ரணதுங்கா,
கூட்டுப்படைத்தளபதி ஹமில்
(4-ம் பக்கம் பார்க்க)

பொலிஸ் படைக்கு ஆஸியிலிருந்து குதிரைகள்

(கொழும்பு)
இலங்கையின் பொலிஸ் ரேலியாவிலிருந்து 25 குதிரை
குதிரைப்படை பிரிவை விஸ் கள் தருவிக்கப்பட்டுள்ளன
தரிக்கும்முகமாக அவுஸ்தி கொழும்பிலும், வெளி
(4-ம் பக்கம் பார்க்க)

வாணிபம் / தொழில் பதிவுச் சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம்) உதவி அரசாங்க அதிபர் பிரிவு
கரவெட்டி, பசுமிலைப்பள்ளி, களில் தமது வாணியம்/
வடமராட்சி கிழக்கு ஆகிய 4-ம் பக்கம் பார்க்க)

ஓமந்தை பொம்மர் தாக்கு: படுகாயமடைந்த ஆறு பேரை யாழ். எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்) பொம்மரிருந்து வீசப்பட்டுள்ளதாகவும் மேலதிக

அரசுசார்பற்ற பத்திரிகை ஸ்தாபனங்கள்மீது அரசு அதிகாரிகள் பாய்ச்சல்

(யாழ்ப்பாணம்)
வவுனியா ஓமந்தையில் நேற்றுமுன்தினம் காலை 11-30 மணியளவில் இடம்பெற்ற

பொம்மரிலுண்டு வீச்சில் பலத்த காயத்திற்குள்ளாகிய ஆறு பொதுமக்கள் ஓமந்தை வைத்தியசாலையில் அனுமதி

கப்பட்டுள்ளதாகவும் மேலதிக சிகிச்சைக்கு போதியவசதி இல்லாதமையினால் இவர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

(தொழும்பு)
அரசு சார்பற்ற பத்திரிகை அலுவலகங்கள் மீது வருமான

வரி அதிகாரிகள் திடீர் சோதனை நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.
அரசின் கொள்கைகளுக்கு எதிராக இந்தப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டு வருவதால் ஒரு அரசியல்

பழிவாங்கல் நடவடிக்கையாகவே இந்தத் திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகிறது.
அண்மையில் யுத்திய பத்திரிகை அலுவலகத்துக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசவிரோதிகள் இருவருக்கு புலிகள்மரணதண்டனைநிறைவேற்றினர்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு சந்தியில் வைத்து தேசத்துரோகிகள்

இருவருக்கு தமிழீழவிடுதலைப் புலிகள் நேற்று முன் தினம் மரணதண்டனையை நிறை

வேற்றினர்.

கணபதிப்பிள்ளை நடராசா (வயது-38) புதுக்குடியிருப்பு 7ம் வட்டாரம், சதிரவேல் சுந்தரராசா (வயது-40) புதுக்குடியிருப்பு 4ம் வட்டாரம் ஆகியோருக்கே மரண தண்டனை

நிறைவேற்றப்பட்டது.
விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்கள் மற்றும் உதவியாளர்களை படையினரின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்

(4-ம் பக்கம் பார்க்க)

ராஜீவ் கொலை வழக்கு: 26 சந்தேகநபர்கள் நீதிமன்றில் நேற்று ஆஜர்

(சென்னை)
ராஜீவ்காந்தி கொலைவழக்கு விசாரணை பலத்த பாதுகாப்பு மத்தியில் பூந்தமல்லி தடுப்பு சிறைச்சாலை வளாகத்தில்

நேற்று ஆரம்பமாகியது.
சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ் என். சிந்திய் தலைமையில் ஆரம்பமாகிய விசாரணை

(4-ம் பக்கம் பார்க்க)

மட்டு. மாவட்டத்தில் உலர்உணவு வழங்க புதிய நடைமுறை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் உலர் உணவு நிவாரணம் வழங்குவதில் புதிய நடைமுறை அமுல் செய்யப்படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் ரோகான் குணரத்ன தெரிவித்துள்ளார்.
இதன்படி அகதிகள் தங்களை தெளிவாக அடையாளப்

படுத்தும் விதத்தில் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.
கிராமசேவையாளர் சிபாரிசுடன் உதவி அரசாங்க அதிபரின் ஒப்பம் இதில் இடப்படும்.

இனிமேல் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு மாத்திரமே உலர் உணவு வழங்கப்படவுள்ளதாம். (கி)

சுதந்திரதினமான இன்று புலிகள் தாக்கலாம் என்ற அச்சத்தில் வட-கிழக்கில்படைகள்உஷார்நிலையில்

(தொழும்பு)
சுதந்திரதினத்தை முன்னிட்டு இன்று விடுதலைப்புலிகளின் அதிரடித்தாக்குதல்கள் இடம் பெறலாமென இராணுவ உயரிடம் எச்சரிக்கை செய்துள்ளது.
விடுதலைப்புலிகளின் இன்றைய தாக்குதல்களை சமாளிக்கும் விதமாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் இராணுவம் உஷார் நிலையில்

வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ உயரதிகாரிகள் தெரிவித்தனர்.
இதேவேளையில் நாட்டின் ஏனைய பகுதியிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு வடடாரங்கள் தெரிவித்தன. (இ-மி)

வரிவிளம்பரம்

பயிற்சி

பாலர் ஆசிரியர் பயிற்சி 6-2-93இல் ஆரம்பமாகிறது. போயா தினங்களில் நடைபெறும் O. L. சித்தியடைந்த மாணவிகள் விண்ணப்பிக்கலாம். விபரங்கட்கு பாலர் கல்விக் கழகம், 49/5 யாழ்வீதி, யாழ்ப்பாணம். (கி-7193)

வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு மூலவியாதிகள் முத்திரரோகங்களில் பிரபலமானவர் சகலவியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர்சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (கி-7197)

4981 பேர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் கடந்தமாதம் விடுதிகளில் 4981பேர் அனுமதிக்கப்பட்டிருந்தனர். (56)

பொதுசன உதவிப் பணம்

(மானிப்பாய்)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான ஒக்டோபர், நவம்பர் மாதங்களுக்குரிய பணம் தற்போது கிராமசேவையாளர்கள் மூலம் வழங்கப்படுகின்றது. (71-சி)

உதவிப் பணம் மீளாய்வு

(மானிப்பாய்)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்றுக் கொள்பவர்களுக்கான அக்டோபர், நவம்பர் மாதங்களுக்குரிய பணம் மீளாய்வு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது.

இதனைப்பெற வருபவர்கள் தமது குடும்ப பதிவு அட்டை, தேசிய அடையாள அட்டை, உதவிப்பணம் பெறும் அட்டை

யாழ். மாவட்டத்தில் 93 புதிய தொழு நோயாளர்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் கடந்த 1991ம் வருடத்தில் பல்வேறு பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்ட தொழுநோய் ஆய்வுகளின்போது 93 புதிய தொழுநோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலேயே அதிகளவு தொழு நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு அடுத்ததாக யாழ். மாநகரசபைப் பகுதியிலும் தீவகப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து தஞ்சமடைந்திருக்கும் கெற்பலி அகதி முகாமிலும் புதிய தொழு நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். 72

தவறிவிட்டது

சீதாராம் வீதி, தும்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த மாணிக்கம் பத்தரின் நகைக்கடை கணக்குக் கொப்பி கடந்த 29-1-93ல் தும்பளை வேதவனம் ஒழுங்கையில் தவறிவிட்டது.

இதனைக் கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும்.

★ தகுந்த சன்மானம் வழங்கப்படும் ★

(ஏ-2818)

தேவை

ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் ஆளுமை உள்ளவர்கள் தேவை சுயவிபரங்களுடன் 06-02-93ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. ஏ 2835 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (ஏ-2835)

இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்

திறப்பு விழாவும் "ராக பாவம்" நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்:

06 02-1993 - 08-02-1993

நுழைவுச் சீட்டு:

நாளொன்றுக்கு ரூபா 500. ரூபா 250.
மண்டப வாசலில் ரூபா 100.

பொன். சுந்தரலிங்கம்
தலைவர்

அன்பளிப்பு:

ஹரன் வர்த்தக ஸ்தாபனம்
772, தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம். (ஏ 2769)

கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

முரசொலி பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றிய ஊழியர்களின் சம்பளத்திலிருந்து ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவு கழிக்கப்பட்டிருந்தும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்படாமல் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு மேற்படி கொடுப்பனவுகள் 7-ம் திகதி காலை 10 மணிக்கு முரசொலி செயலகத்தில் வைத்து வழங்கப்படும். (கி)

திருட்டு

(நெல்லியடி)

சரவெட்டி திருஇருதய சன சமூக நிலைய மண்டபத்திலிருந்த கவர் மணிக்கூடு ஒன்று அண்மையில் திருடப்பட்டுள்ளது. (160)

இன்று

(உடுவில்)

மருதனாமடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனத்தில் இன்று நான்காம் திகதி முதல் ஆறும் திகதி வரை வதிவிடவேளாண்மை திரு சு குகதாஸ் தலைமையில் பட்டறை நடைபெற உள்ளது. (109)

0 0 0

(உடுவில்)

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சிளைச் சங்கத்தின ராக இணுவில் மத்திய கல்லூரியில் இன்று நான்காம், ஆறும் திகதிகளில் கலைக்கூறு I. IIக்கான பயிற்சிகள் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நடாத்தப்பட உள்ளது. (109)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினர் மத்தியஸ்தர்களுக்கான விசேட விரிவுரை வகுப்பொன்றை இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு செண். பற்றிக்ஸ் கல்லூரியில் நடாத்தவுள்ளார்கள்.

உலக உதைபந்தாட்டச் சம்மேளத்தினால் புதிதாய அறிமுகப்படுத்திய சட்டவிதிகள் பற்றிய விளக்கங்களும் மேற்படி விரிவுரை வகுப்பில் விளக்கம் அளிக்கப்படுமென்று மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. கே. என். வை. மொறிஸ் தெரிவித்தார். (வி)

இராசி பலன்

04-02-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு தை 22)

மன்னார் ஆயருக்கு பல இடங்களிலும் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார் ஆயர் இராசப்பு ஜோசப் ஆண்டகை அவர்களுக்கு யாழ். ஆயர்இல்லம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பொதுவரவேற்பு வைபவம் ஒன்றை நடாத்தவுள்ளது.

மேற்படி வரவேற்பு வைபவம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு யாழ் ஆசனக்கோவில் முன்றலில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்று வியாழன் றக்காவீதி புனித திரேசம்மா ஆலய பங்கு மக்களாலும் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை உரும்பிராய் பங்கு மக்களாலும் அந்தந்த இடங்களில் பொது வரவேற்பு வைபவங்கள் நடைபெறவுள்ளது. -வி-

நினைவஞ்சலிக் கூட்டம்

(ஆனைப்பந்தி)

ஜனவரி மாதத்தில் விரச்சாவடைந்த தீவகத்தைச் சேர்ந்த மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த 31ம் திகதி கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தீவக உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு செம்மணன் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் யாழ் மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு தங்கன், தெல்மராட்சி உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஜெயா, மகளிர் முன்னணியின் தீவகப் பொறுப்பாளர் அன்பரசி தீவக மாவீரர் செயற்பாட்டுக் குழு உறுப்பினர் திரு. [illegible] ஆகியோர் நினைவுரைகள் நிகழ்த்தினார்கள். (101)

விலைகள் அதிகரிப்பு

(புலோலி)

செத்தல் மிளகாய், அரிசி, மண்ணெண்ணை தேங்காய் எண்ணை என்பவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன.

இப்பகுதியில் செத்தல்மிளகாய் ஒரு கிலோ 280 ரூபா முதல் 300 ரூபாவரையிலும் ஒரு கொத்து அரிசி 54 ரூபாவாகவும் ஒரு போத்தல் மண் எண்ணை 125 ரூபாவாகவும் ஒரு போத்தல் தேங்காய் எண்ணை 70 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (61)

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

பதவி வெற்றிடம்

கணக்காளர் தரம் 104/7

மேற்படி பதவிக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சம்பள அளவுத் திட்ட இல. 104/7

சம்பளம்: 1105—60X4—75X11—2170

இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் இதர படிகளும்

வயது: 40 வயதுக்குபட்டவர்கள்.

தகைமைகள்

(அ) கூட்டுறவுச்சங்க ஊழியர் 8ம் சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதிவியொன்றில் மூன்று(3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 9ம் சம்பளத்திட்டத்தில் உள்ளகக் கணக்குப் பரிசோதகர்/கணக்குப்பதிவியலாளர்/கணக்கு அல்லது கணக்குப் பரிசோதகர் அலு

மாதங்களுக்குரிய பணம் மீளாய்வு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது.

இதனைப்பெற வருபவர்கள் தமது குடும்ப பதிவு அட்டை, தேசிய அடையாள அட்டை, உதவிப்பணம் பெறும் அட்டை என்பவற்றுடன் எதிர்வரும் 8-ந் திகதி காலை வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு வருமாறு வேலணை உதவி அரச அதிபர் திரு. இ. இளங்கோவன் அறிவித்துள்ளார். (71)

பண்டித வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆதரவில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள கல்விக் கோட்டங்களிலே பிரவேச, பால பண்டித, பண்டித வகுப்புக்களை தொடங்கும் முயற்சியாக மானிப்பாய் இந்துக் கல்லூரியில் (பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம்) எதிர்வரும் 6-ம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு மேற்படி வகுப்புக்களைத் தொடங்குகிறது.

ஏனைய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த கழக ஆசிரியர்களையும், கற்க விரும்பும் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் தமிழில் திறமைச் சித்தி பெற்றோரையும் அந்தந்தக் கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடம் தத்தமது பெயர்களை விரைவில் பதிந்து கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

772, தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம். (எ 2769)

8 ம் ஆண்டு நினைவஞ்சலி

நாராயணசாமி ராமசாமி

தோற்றம்: 3-4-1920 மறைவு: 4-2-1985

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்பின் திருஉருவாய் வாழ்ந்து எம்மை பாசத்துடன் காத்து ஈசனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வமே.

உங்கள் ஆத்மா சந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர், மைத்துனர்கள்,

கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ்,
39/2, 119, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-2826)

இராசி பலன்

04-02-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு தை 22)

துவாதசி மு. ப. 11-17 வரை திருவாதிரை மு இ. 7-09 வரை, மரணயோகம் பிரதோச விரதம், இராகு காலம், பிற்பகல் 2-05 முதல் 3-35 வரை சுபநேரம் காலை 8-05 முதல் 9 35 வரை

மேடம். பிறருக்கு உதவுதல், சுபகாரியம், அதிக வருவாய்.

இடபம்: ஏழ்மைநிலை, மனதுயரம், வாக்குவாதம்.

மிதுனம்: ஒத்துப்போதல், உறவினர் நன்மை, நற்செயல்,

கடகம்: கஞ்சத்தனம், நிபாயம் தவறுதல், தொழில் நஷ்டம்.

சிங்கம்: புத்திக்கூர்மை, அத்துமீறல், குடும்ப மகிழ்ச்சி

கன்னி; மனதைப் பறிகொடுத்தல், தொழில் சிறப்பு குடும்ப செலவு.

துலாம்: ஆடம்பாசெலவு, வேலைப்பழு, தொழில் கஸ்டம்.

விருச்சிகம்: எதிரிகள் வசை பாடல், ஏமாற்றம், எதிர்பாராத துன்பம்.

தனுசு: கற்பனை மிகுதி, தீவகனப்பான்மை, தொழிலாயம்.

மகரம்: அகம்பாவம், காரிய சித்தி, கிரக பிரவேசம்

கும்பம்: பிறர்தயவு, பொறுப்புக்கள் தவறுதல், பணமுடை

மீனம்: வாக்குவாதம், மனவேதனை, குடும்ப கஸ்டம்.

ஜோஸ்யர்

(அ) கூட்டுறவுச்சங்க ஊழியர் 8ம் சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதிவியொன்றில் மூன்று(3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 9ம் சம்பளத்திட்டத்தில் உள்ளகக் கணக்குப் பரிசோதகர்/கணக்குப்பதிவியலாளர்/கணக்கு அல்லது கணக்குப் பரிசோதகர் அலுவல்கள் சம்பந்தமாய் எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு 6 வருடங்களுக்குக்குறையாத அனுபவம் அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டுப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமாய் மேற்பார்வை மட்டப் பதவியில் நாலு 4) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது;

(இ) கூட்டுறவுச்சங்க ஊழியர் [உயர்தரம்] சான்றிதழ்/க பொ. த. உயர்தரம் கணக்கியல் உட்பட மூன்று [3 பாடங்களில் சித்தியுடன் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை சம்பந்தமாய் மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் [ஆறு] வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

விண்ணப்ப முடிவுதிகதி: 19-02-1993

சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம், திருநெல்வேலி என முகவரியிட்டு கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் "பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு 19 02-93 திகதி அல்லோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

— பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
திருநெல்வேலி

(எ 2849)

ஆசிய நாட்டவர்கள் மீதான தாக்குதல்; மேற்கு நாடுகளில் பொலிஸாரே குற்றவாளிகள்

(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளில் ஆசியநாட்டவர்கள்மீது நடை பெற்றுவரும் இனவாத வன் முறைகளிலும், மனித உரிமை மீறல்களிலும் அந்தந்த நாட்டு பொலிசாரே தீவிரமாக ஈடு பட்டு வருவதாக 'சர்வதேச மன்னிப்புச்சபை' நேற்று முன் தினம் விடுத்த அறிக்கையில் பலத்த குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

அண்மைக்காலமாக பிரிட் டன், பிரான்ஸ் ஜேர்மனி உட்பட ஒன்பது ஐரோப்பிய நாடுகளில் ஆசிய நாட்டவர் மீதும் கறுப்பினமற்றும்சிறுபுக் மீதும் இனவாதவன்முறை கள் மிக மோசமாக நடை பெற்று வருகின்றன.

இவற்றை அந்தந்த நாடுக ளில் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொலிசாரே தீவிர மாக நடத்திவருவது பல சம் பவங்களில் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனை பல சமூகஸ்தாபனங்களும் தெரிவித்துள்ளதாகவும் மன் னிப்புச்சபை கூறும் குற்றச் சாட்டை சுமத்தியுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் மோசமாக அதிகரித்துவரும் கறுப்பின மக்களுக்கு எதிரான வன்முறைகள் குறிப்பாக ஆசிய நாட்டவர்களுக்கு எதி ராகவே நடாத்தப்படுகிறது.

ஜேர்மனியில் கடந்த ஒரு ஆண் டில் இடம்பெற்ற வன்முறைத் தாக்குதல்களில் ஐந்தில்கும் மேற்பட்ட இலங்கைத்தமிழர் உட்பட 60 ஆசிய நாட்டவர் கொலைப்பட்டுள்ளனர். நூறி றுக்கும் மேற்பட்டோர் படு காயமடைந்துள்ளனர்.

இதேபோன்ற ஒன்முறைத் தாக்குதல்கள் ஐரோப்பிய நாடுகளில் ஆசிய நாட்டவர் மீது அதிகளவாக தங்கவைக் கப்பட்டுள்ள முகாம்களுக் களின் பெருமளவில் நடைபெற் றுள்ளது. இத்தாக்குதல்களில் அதிமுகாம்களுக்கு காவலி வைக்கப்பட்டுள்ள பொலிசா ரின் உடந்தையுடனே நடை பெற்றுள்ளது.

மேலும்பல ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் தங்கி யுள்ள ஆசிய நாட்டவர்கள் போலிஸ் காரணங்களுடனோ காது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களில் தடுத்து வை க்கப்படுவதும் அடு வைத்து மிக மோசமாக தாக்கப்படுவ தும் அதிகரித்து வருகிறது.

அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களிலிருந்து இவ்வாறான பல சம்பவங்கள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப் பட்டுள்ளது மேலும் பல தாக்குதல்களின் பின்னணியில் ஆசிய நாட்டவர்களின் ஆயுத வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஐரோப்பிய நாடுகளின் பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் கைதுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறைவாசம் அனுபவிக்கும் ஆசிய நாட்டவர்கள் பலர் சித்திரவதை செய்யப்பட்ட துடன் அவர்கள்மீது பல தாக்குதல்களும் மேற்கொள்ளப் பட்டமையும் மன்னிப்புச்சபை யினால் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

மேலும் சொந்த நாடுகளில் இடம்பெறும் உள்நாட்டுப் போர், பொருளாதார நெருக் கடி உட்பட பல்வேறு கார ணங்களுக்காக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமுள்ள வெளி நாட்டவர்களை மக்களி கொடுமைப்படுத்த வேண்டா மெனவும் மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயங்களில் சம்பந்தப் பட்ட நாடுகள் வன்முறைகளை தடுத்து நிறுத்து வருடன் இவற்றை மீறும் பொலிசாருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தி யுள்ளது. (பி)

காபூல் மீது ரொக்கட் தாக்கு 78 பேர் பலி; 80 பேர் காயம்

(காபூல்)

ஆப்கான் தலைநகர் காபூலில் மீது ஹெக்மத்தியார் தலைமை யிலான முஜாகுதீன் கெரில் லாக்கள் மேற்கொண்ட ரொக்கட் தாக்குதலில் 78 பொதுமக்கள் பலியான துடன் 80பேர் படுகாயமடைந் துள்ளனர்.

இருபோட்டிக் குழுக்களி டையே நடைபெற்றமோதல் தொடர்ந்தே இந்த ரொக் கட் தாக்குதல் நடைபெற்ற தாக் காபூலில் அரச கட் டுப்பாடுகளை விடுவி பலவும் இதனால் தகர்ந்து போயுள் னவாம்.

காபூலில் இந்திய தூதரக வளாகத்தில் விழுந்த குண் டொன்று வெடித்ததில் ஒரு வர் கொல்லப்பட்டார் இந்த மோதல் போட்டிகுழுக்களி டையில் நடந்த முப்பாட் சமரின் நடுவில் சிக்கிய சரா சரி ரு ஐந்தாகவே ஒருவரும் அவரது காரோட்டியும் படு காயமடைந்தனர்.

இதற்கிடையில் கடந்த திங் கள் ஐ.நா. பணியாளர்களின் நால்வரை படுகொலை செய்த குற்றவாளிகள் ஆப்கான் அரசு கைதுசெய்யவேண்டு மென ஐ.நா. செயலர் கலி புறுத்தியுள்ளதுடன் 4ஐ நா. பணியாளர்கள் கொலை செய் யப்பட்டதையும் கண்டித்துள் ளார். (பி)

தமிழகத்தில் மீண்டும் வெடிகுண்டு கலாசாரம்

(சென்னை)

தமிழகத்தில்மீண்டும் 'வெடி குண்டு கலாசாரம்' தொட ங்கிவிட்டதாக தமிழக காங் கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

தமிழக அரசு நிர்வாகி கள்க் கட்டுப்படுத்தத் தவறி யமையாலேயே இவ்வாறான வெடிகுண்டுத் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன எனவும் இவ்விடயம் குறித்து மத்திய அரசும் அவசரத்தில் வெள்ள வேண்டுமெனவும் அவர் கூறி யுள்ளார்.

அண்மைக் காலமாக காங் கிரஸ்—தி. மு. க. உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டு வரு வதும் தெரிந்ததே. (பி)

திருமலை இந்துக்கல்லூரி தேசிய மட்டத்துக்கு

(திருமலை)

திருகோணமலை இந்துக் கல் லூரி தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

திருமலை ராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திசபை யின் வேண்டுகோளுக்கிணங் ஜனாதிபதி பிரேமதாசா இந் தக் கல்லூரியை தேசிய பாட சாலையாகத் தரம் உயர்த்தி யுள்ளார்.

தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்படுவதற்குத் தேவையான தகுதிகள் இக்கல் லூரியில் இருப்பதைக் கண்ட பின்னரே கல்லூரி தேசிய பாட சாலையாகத் தரம் உயர்த்தப் பட்டதாம். (கி)

ஆங்கில ஆசிரியர்களுக்கு மேலதிகமாக வந்த 50,000 ரூபா திரும்பியது

(திருநெல்வேலி)

பதுளை ஆங்கில ஆசிரியர் களுக்கென அனுப்பப்பட்ட சம்பளப்பணத்திலிருந்துகுறிப் பிட்ட அளவு பணம் மீள திருப்பியளிக்கப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

பதுளை ஆங்கில ஆசிரியர் கள் சென்றவருட 3ம் தவணை முதல் பாடசாலைகளுக்கு நிய மிக்கப்பட்டனர். இப்பகுதி ஆங்கில ஆசிரியர்களின் முழுவெற்றிடமும் நிரப்பப் படாததால் அவர்களின் சம் பளமாக வந்த நிதியிலிருந்து ரூ. 50 000/- திருப்பிச் சென் றுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது

பதுளை ஆங்கில ஆசிரியர் களுக்கான இவ்வருடத்தின் சேவை நீடிப்பு தொடர்பான அனுமதிகடிதங்கள் கல்வி பணிப்பாளரால் வழங்கப் பட்டுவருகிறது. (157-இ)

மாவீரர் வாரம் பற்றி அபிப்பிராயம் கூற கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளோ, மாவீரர் வாரமோ தமிழீழத்தின் தேசிய திருநாளாக ஆகிவிட்ட நில யில், இந்த ஆண்டு நடை பெற்று முடிந்தமாவீரர் வாரத் தின் நிழ்வுகளி நிறைவான வையாக இருந்தனவா? அல் லது அவற்றில் ஏதாவது மாற் றங்கள் தேவைய? திருத்த வேண்டிய குறைபாடுகள், நீக்கவேண்டிய தவறுகள் இருந் தனவா? எதிபைபற்றிதமது எண்ணக்கிடக்கைகளை வெளிப் படுத்துவது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் கடமை யும் உரிமையும் ஆகும்.

இவ்வாறு தமிழீழ மாவீரர் பணிமனை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:

மாவீரர் வார நிகழ் வுகள் பற்றி மாவீரர்களின், அவர்களது பெற்றோரை மதிந் துப் போற்றுவதற்கான நிகழ் ச்சிகள் பற்றி, அதற்காக வகைப்பிடிக்கப்பட்ட ஒழுங்கு முறைகள் பற்றி தமக்குத் தோன்றிய பதான்றுகின்ற எண்ணக்களை, கருத்துக்களை தமிழீழ மாவீரர் பணிமனை க்கு நேரிலோ, எழுத்து மூலமோ தெரியப்படுத்தி மாவீரர் வாரத்தை மாவீரர் நாளை முழுநிறைவான திரு நட்டளை நடத்துவதற்கு எல்லோ ஒத்துழைப்பு வழங்கு மாறு தமிழீழ மக்களை நாம வேண்டி நிற்கிறோம்.

தமிழீழத்தின் விடிவுக்காக தமிழீழ மண்ணின் விடுதலைக் காக தம்மை ஒப்புக்கொடுத்த தமிழீழ விடுதலைப்போராட் டத்தில் தம்மை இணைத்துக் கொண்டு களத்தில் இறங்கிப் போராடி, இன்னு யிரை ஈந்து வீரச்சாவடை தழுவிய பதினாயிரக்கணக் கான மாவீரர்களை நினைவு கூருகின்ற வகையிலே அவர் களது அருஞ்செயல்களை, வீர தீரங்களை, சுவங்களை வெளிக் கொண்டு வந்து அவர்களை ஏற்றி போற்றுகின்ற வகை யிலே நவம்பர் 27ம் நாளை ஆண்டுதோறும் மாவீரர் நாளாக தேசிய திருநாளாக மக்கள்எழுச்சிநாளாக கண்டுப் பிடிப்பதென எமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்க ளால் அறிவிக்கப்பட்டு 1989ம் ஆண்டு முதல் மாவீரர் நாள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

1989இல் முதன் முதலி மாவீரர் நாளை தேசிய திரு நாளாக தமிழீழ மக்கள்எழுச் சியுடன் கடைப்பிடித்தனர் தமிழீழ மாவீரரை நினைவு கூருவதிலும், அவர்களை ஏற றிப் போற்றுவதிலும் அவர் களது அருஞ்செயல்களை வெளிக் கொணர்வதிலும் தமிழீழ மக் கள் வெளிப்படுத்திய பேரார வம் எல்லையற்றதாக இருந் தது. ஆயிரக்கணக்கான மாவீரர்களை நினைவுகூரு வதிலும் தமிழீழ மக்கள் தமது எழுச்சியை ஆர்வத்தை வெளிப் படுத்துவதற்கு ஒருநாள் போதாதென்ற நிலையில் 1990ஆம் ஆண்டில் இருந்து நவம்பர் 21 – 27 வரையான ஏழுநாட்கள் மாவீரர் வார மாக அறிவிக்கப்பட்டு ஆண்டு தோறும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. (பி)

விமான விபத்து 16 பேர் பலி

(லண்டன்)

மலேசிய நாட்டு விமானம் ஒன்று சுமத்திராவின் வட பகுதியில் வீழ்ந்து நொருங்கி யதில் அவ் விமானத்தில் பய ணம் செய்த 16 பேரும் உடனி கருப் பலியானார்கள். (எ)

ஜனவரி மாத கொடுப்பனவு

(ஆணைப்பந்தி)

புனருதிவு, நயிதிவு பல நோக்கு கூட்டுறவுச்சங்க கிரா மிய வங்கியில் ஒப்மூயும் பெறுவோருக்கான ஜனவரி மாதக்கொடுப்பனவுதற்போது அடைக்கலமாதா தேவாலயத் திற்கு அருகிலுள்ள சங்க கிரா மிய வங்கியில் பணமாக வழங் கப்படுகின்றது. (191)

விழிப்புணர்வு போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வித்திணை க்களம் யாழ் மாவட்ட பாட சாலைகளில் ஆண்டு 4 தொடக் கம் ஆண்டு 11 வரையான மாணவர்களிடையே விழிப் புணர்வுப் போட்டி ஒன்றை ஏற் பாடு செய்துள்ளது

கண்ணிவிஞ்ஞான துறையிற் கட்டுரைப்போட்டி ஒன்றும் நடைபெறவுள்ளது இப் போட்டி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தனித்தனி யாக நடைபெறும். (159)

தபாலதிபர் அட்டை கால எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்காலிக, அவசர, புதுப் பித்தல் பயணி அனுமதி அட் டைகளை வைத்திருக்கும் பய ணிகள் மீண்டும் கிளாலி பட குச் சேவைகள் ஆரம்பிக்கும் திகதியில் இருந்து மேலும் பதினைந்து நாட்களுக்குள் பயண அனுமதி அட்டைகளை பயன்படுத்தி வடபகுதிக்கு வெளியே பயணம் மேற்கொள் முடியும்.

இவ்வாறு தமிழீழ போக்கு வரத்துக் கண்காணிப்புப் பிரி வினர் அறிவித்துள்ளனர்.

கிளாலி படகுச் சேவைகள் இடைநிறுத்தப்பட்ட தற்கு முன்னர் 20-ம் திகதியில் இருந்து மீண்டும் கிளாலி பட குச் சேவைகள் ஆரம்பிக்கும் திகதியில் இருந்து மேலும் பதினைந்து நாட்களுக்குள் பயண அனுமதி அட்டைகளை பயன்படுத்தி வடபகுதிக்கு வெளியே பயணம் மேற்கொள் முடியும்.

இவ்வாறு தமிழீழ போக்கு வரத்துக் கண்காணிப்புப் பிரி வினர் அறிவித்துள்ளனர்.

விமானம் மூலம் பரிசுத்த பத்திரம்

(தொடர்ச்சி)

சுதந்திர தினத்தை முன் னிட்டு மக்கள் வங்கி ஆசனத் திலிருந்து ஒருகோடி ரூபா பணம் பெறுமதியான பத்திரங் களை நேற்றுமுன்தினம் விமா னம் மூலம் கொழும்பிலிருந்து பலாலிக்கு அனுப்பி வைத்தது.

இன்று வியாழக்கிழமை கொழும்பு, கல்முனை, குரு நகர் மாவட்டங்களில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை விமானங்கள் மூலம் இப்பத்தி ரங்கள் போடப்படும்

கண்டி, திருகோ, மாத் தறை புத்தளம், அநுராதபுரம் இரத்தினபுரி ஆகியபகுதிகளில் பகிருப்படவுள்ள பத்திரங்களுடன் 300 பயணிகள் புறப்பட வுள்ளனர். இவர்களை மலை யகம் பொறுக்கி எடுக்கலாம்.

பகிருப்படவுள்ள பத்திரங்கள் கிடைத்தவர்கள் சமீபத்தில் உள்ள மக்கள் வங்கியிடம் ஒப்படைத்து 200 ரூபாவுக்கான செம்பிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்கலாம். (பி)

நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கை பாலரி ஞானோதய சபை 46 ஆவது ஆண்டை முன்னிட்டு 7ம் திகதி ஞாயிறு காலை 9 மணியளவில் யாழ் விசுவகருக்கு கிருஷ்ண ஆச்சாரியார் இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து 'வந்த புராண வரலாற்றுக்குறிப்பு' சமயப் பொது அறிவு' 'விளை விடை' 'பயனுள்ள கட்டுரை கள் பத்து' ஆகிய நூல்கள் வெளியிடும் நிழ்வு இடம் பெறும்.

இலங்கை இளைஞர்களுக்கு
வெளிநாடுகளில்
அதிகளவு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த இளைஞர்கள் பெருமளவில் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப் பெறவுள்ளனர். இதற்கான துரித நடவடிக்கைகளில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் ஈடுபட்டு வருகிறது. வெளிநாடு வேலை வாய்ப்புப் பணியகப் பணிப்பாளர் டேவிட் சொய்சா இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:- கடந்த ஆறு வருடங்களில் 2 லட்சத்து 39 ஆயிரம் பேருக்கு மேற்படி பணியகம் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளது இவர்களின் சேமநலன்களுக்காக 7 லட்சம் ரூபாவுக்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க)

1995-ல்
இலங்கையில் உலகக்கிண்ண
கிரிக்கெட் போட்டி

(லண்டன்)

1995ம் ஆண்டு நடைபெறவிருக்கும், 6வது உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி இலங்கை இந்தியா. பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ளது.

நேற்று, லண்டனில் கூடிய சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் இந்த முடிவை எடுத்தது சம்மேளனத்தின் இந்த முடிவு தமக்கு பெரும் மகிழ்ச்சியை அளிக்கின்றது என்று. சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்ட மேற்படி மூன்று நாடுகளின் பிரதிநிதிகளும் தெரிவித்தனர்.

12 நாடுகளின் கிரிக்கெட் அணிகள் பங்குபற்றும் 6வது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியை தமது நாட்டில் நடாத்தும்படி, பிரிட்டன் விண்ணப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-வி)

ஷார்ஜா கிரிக்கெட்:
இலங்கை — பாகிஸ்தான்
இறுதி ஆட்டத்தில் மோதுகின்றன

(ஷார்ஷா)

மூன்று நாடுகளுக்கிடையில் ஷார்ஜாலில் நடைபெற்று வரும் ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இன்று இலங்கையும் - பாகிஸ்தானும் மோதுகின்றன.

இலங்கைக்கும் சிம்பாப்வேயிக்குமிடையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை 30 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இலங்கை 43 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 266 ஓட்டங்களைப் பெற்றது. சிம்பாப்வே 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 236 ஓட்டங்களைப் பெற்றது. (இ-வி)

குமாரியில் லக்ஸ்பிறே பால்மா

(யாழ்ப்பாணம்)

குமாரி கப்பலில் 23 மெற்றிக்தொன் லக்ஸ்பிறே பைக்கட்டுகள் வரஉள்ளன.

இதில் கூடுதலான லக்ஸ்பிறே பைக்கெட்டுகள் யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வருகின்றன எனத் தெரியவருகின்றது.

மன்னார் ஆயருக்கு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு நேற்று யாழ். புனித யுவானியார் தேவாலய முன்றலில், பங்கு மக்களால் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

ஆயரின் திருப்பலிப் பூசையின் பின் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (வி)

கலாமண்டப திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இளம்கலைஞர் மன்றத்தின் கலாமண்டபத் திறப்பு விழா எதிர்வரும் 6ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

கிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இம்மண்டபத்தை திறந்துவைப்பார். (இ-ரி)

அரச அதிபர் போக்குவரத்துப் பாதிப்பு
குறித்து அரசுக்கு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவுக்கானபோக்குவரத்து பிறபகுதிகளிலிருந்து முற்றாகத் தடைப்பட்டிருப்பது பற்றி யாழ் அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் கூட்டுப்படை தலைமை அலுவலகத்திற்கும் அரசஉயரதிகாரிகளுக்கும் அவசர தகவல் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

போக்குவரத்து வசதியில்லாது யாழ். மாவட்டத்தில் தற்போது தங்கியுள்ள பிற மாவட்டத்தைச் சேர்ந்த ஊழியர்களை அவர்கள் வேலை பார்க்கும் சொந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கத்தாந்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அரச அதிகாரிகளைக் கேட்டுள்ளார். (இ-158)

இன்று 1200 கைதிகளுக்கு விடுதலை

(கொழும்பு)

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு 1200 கைதிகள் இன்று விடுதலை செய்யப்படவுள்ளனர்.

நீதியமைச்சர் ஜனாம் ஏ. ஸி எஸ் ஹமீத்தின் சிபார்கன் பேரில் மேற்படி கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனராம். (சி)

குழந்தைகள் கடத்தப்பட்டு
நகைகள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் குழந்தைகளைக் கடத்திச் சென்று அவர்கள் போட்டிருக்குப் தங்க நகைகளைக் களவாடியபின் அந்தக் குழந்தைகளை அனாதரவாக விட்டுச் செல்லும் சம்பவங்கள் தற்போது அடிக்கடி நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது.

நேற்றுக்காலை குருநகர் புதுமைமாதா தேவாலயக் கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது தாயின் அருகில் நின்று கொண்டிருந்த ஒரு குழந்தையை மிகசாதூரியமாகக் கடத்திச் சென்ற ஒரு கோஷ்டி அவனிடமிருந்த தங்கச்சங்கிலி, காப்புபோன்றவற்றை திருடிவிட்டு குழந்தையை அனாதாவாக விட்டுச் சென்றுள்ளது.

இது போன்ற சம்பவங்கள் கடந்த வாரம் நாவாந்துறை, வண்ணார்பண்ணைப் பகுதிகளிலும், குழந்தைகள் வீட்டின் முன்னால் விளையாடிக்கொண்டிருக்கும்போது அவர்கள் கடத்தப்பட்டு அவர்களின் நகைகள் களவாடப்பட்ட பின்பு அனாதாவாக விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவங்கள் தற்போது காவல்துறையினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. (இ-வி)

பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் திருமதி நிரஞ்சினி சங்கரி முதலாம் வருட மாணவர்கள் 60 பேர் சித்தியடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாப்பரசர் ஆபிரிக்க விஜயம்

(இத்தாலி)

பரிசுத்த பாப்பரசர் 2 வது ஜோண்போல், தனது 10-வது ஆபிரிக்க நாட்டுப் பயணத்தை நேற்று ஆரம்பித்தார்

பரிசுத்த தந்தை சமாதானம் வேண்டி இதுவரை 57 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (வி)

மருந்து தட்டுப்பாடு

(புலோலி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு பலத்த கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் மாத்திரமன்றி வார்டுகளிலும் சாதாரண நோய்க்களுக்குரிய மருந்து வகைகள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (61)

மூளைக்காய்ச்சல் மாணவி பலி

(கொழும்புத்துறை)

யாழ். செல்றோக் வித்தியாலயத்தில் கல்வி பயின்ற ஏழாம் ஆண்டு மாணவி செல்வி ரட்ணராஜா பிரிகில்டா மேரி (வயது 12 மூளைக்காய்ச்சல் நோயால் யாழ் அரசினர் வைத்தியசாலையில் இறந்துள்ளார்.

இறந்த மாணவி குருநகர் தொடர்மாடிக்கு அருகாமை கடற்கரை வீதியைச் சேர்ந்தவர். (154 சி)

பயிற்சி நெறிகள்

(பண்டத்தரிப்பு)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் இவ்வருடத்திற்கான பயிற்சி நெறிகள் இம்மாதம் 8-ம் திகதியன்று ஆரம்பமாகவுள்ளது. [72]

மாதாந்த கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் நுண்கலைமன்றத்தின் மாதாந்தக் கருத்தரங்கு 7ம் திகதி ஞாயிறு மருதனாமடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'இந்திய மரபில் ஓவியக்கலை' எனும் தலைப்பில் கலாகேசரி ஆ. தம்பித்துரையும் 'இந்திய மரபில் சிற்ப கட்டடக்கலை' என்ற தலைப்பில் கலாநிதி செ. கிருஷ்ணராசாவும் உரையாற்றவுள்ளார்.

ராஜீவ் கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யின்போது குற்றம்சாட்டப்பட்ட 26 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்

குற்றம்சாட்டப்பட்ட 26 பேரையும் இம்மாதம் 17ம் திகதிவரை காவலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி வழக்கு விசாரணையை இம்மாதம் 17ம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். (இ-க)

ஓமந்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த ஆறுபேரையும் யாழ். வைத்தியசாலைக்கு கொண்டு வருவதற்கு அப்பகுதியில் உள்ள சமூக நலன்விரும்பிகள் முயற்சிசெய்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. [இ-56]

முல்லைத்தீவு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

குவி வைத்து காட்டிக் கொடுத்தது, இயக்க முகாம்களை காட்டிக் கொடுத்தது புலிகள் இயக்க முக்கிய தளபதிகளை கொல்வதற்கு திட்டமிட்டு செயற்பட்டது, குண்டுகளை வெடிக்க வைக்கும் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டது ஆகியவற்றுக்காகவே இவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

இவ்இருவரும் புதுக்குடியிருப்பு, தண்ணீரூற்றுப் பகுதியில் பொதுமக்களின் பாரவைக்காக நிறுத்தப்பட்ட பின்னர் புதுக்குடிருப்பு சந்தியில் வைத்து அவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. [க-இ]

மேற்குலக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய விருப்பம் கொண்டுள்ளதாகவும் இதற்கென அரசின் அனுமதியைக் கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குடா நாட்டில் போக்குவரத்துத் தடைப்பட்டதனால் ஏற்படவிருக்கும் பாதகமான விளைவுகளைத் தடுக்கும் நோக்குடன் விடுதலைப் புலிகளுடன் ஒரு இணக்கத்துக்கு வந்து போக்குவரத்தைச் சீர் செய்யுமாறும் அரசிடம் மேற்குலக இராஜதந்திரிகள் வலியுறுத்தியுள்ளனர். (இ)

வடக்கு

(1-ம் பக்க தொடர்ச்சி)

தாரம், மின்சாரம், நீர் விநியோகம் ஆகிய திட்டங்களுக்கென இத்தொகை பயன்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-க)

அரிசி, பால்மா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக கொழும்புக்கு அனுப்பியுள்ளார்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் சிறுவர்கள், குழந்தைகள் உட்பட பலர் பால்மா இன்மையால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளதுடன் யாழ் மாவட்டத்திற்கு தேவையான பால்மா வகைகளை உடனடியாக அனுப்பி வைக்குமாறும் கேட்டுள்ளார். [இ-சு-158]

அரசு சார்பற்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய ஒரு சோதனைக் குழு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டது. சமகாலத்தில் இது போன்ற சகல பத்திரிகை அலுவலகங்களுக்கும் இந்த சோதனைக் குழு 'திக்' விஜயம் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசமேலிடத்து உத்தரவுப்படியே தாம் இவ்விதம் திடீரெனப் பிரவேசிப்பதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத்திடீர் சோதனைகள் குறித்து சம்பந்தப்பட்ட பத்திரிகை ஊழியர்கள் கடும்ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து பத்திரிகையாளர்கள் பேசவுள்ளனர். (இ)

வாணிபம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தொழில் முயற்சிகளைப் பதிவு செய்ய விண்ண பித்தவர்கள், வாணிபம்/தொழில் பதிவுச் சான்றிதழ்களைப் பின்வரும் நாட்களில் காலை 9-00 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரை யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் வருவாய் பகுதிச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளும்படி விடுதலைப்புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

சான்றிதழ்கள் உரிமையாளர்களிடம் மட்டுமே கையளிக்கப்படுமென்பதைக்கவனத்திற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை 5ம் திகதி கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு 6-ம் திகதி பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்கஅதிபர் பிரிவு, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு.

பொலிஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களிலும் வீதிப் போக்குவரத்தைக் கண்காணிக்கும் முகமாக இந்தக் குதிரைகள் தருவிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

1921-ம் ஆண்டு முதல் பொலிஸ் பிரிவில் குதிரைப் படைப்பிரிவு இயங்கி வருவதகவும் இதுவரை இப்பிரிவில் மொத்தம் 60 குதிரைகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இருபத்தைந்து பொலிசார் செய்யும் வேலையை ஒரு குதிரைப்படை பொலிஸ் கான்ஸ்டபிள் செய்யமுடியுமெனவும் கூறப்படுகிறது. (இ-வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Nnmber B/10336/B